FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8319499

1. District : Salem PS: VAAC Year: 2025 FIR No.: 22/AC/2025 Date: 24.12.25
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: Act 1988 as amended in Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to : 1) 12.12.2025 at 12.00hrs
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : Time to : 2) 22.12.2025 at 12.30hrs
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : Time : 24.12.2025 at 07.00hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : Computer typed Complaint
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: 3km, Southwest
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : (b) Address : VAO Office, Sheveapet, Salem
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : K. G. Balaji (b) Father's/ Husband's Name : K. M. Gopinam
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : (d) Nationality : Indian (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : (g) Address : 23/7, A, Subramanibarathi St, Vidya Nagar, Ammapet, Salem
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. Rajasekar, VAO, Shevapet, Salem

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10 Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11 Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Seperate sheet herewith attached

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

24/12/2025

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

24.12.25

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

24.12.25 at 01.35

15 Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் R. D. RAM KUMAR

Rank: நிலை ..... No. எண் .....

Inspector of Police
VAC, Salem

சேலம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.22/AC/2025 u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018-ன்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்.12-ன் தொடர்ச்சி...

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது: 24.12.2025-ஆம் தேதி புதன்கிழமை காலை சுமார் 07.00 மணிக்கு சேலம் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது, K.G. பாலாஜி, த/பெ K.N.கோபிநாத், 23/7 A சுப்ரமணிபாரதி தெரு, வித்யா நகர், அம்மாபேட்டை, சேலம் மாவட்டம். என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரின் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர்,K.G. பாலாஜி, த/பெ K.N. கோபிநாத்,23/7 A சுப்ரமணிபாரதி தெரு, வித்யா நகர், அம்மாபேட்டை, சேலம் மாவட்டம். பெறுநர், காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்புத் துறை, சேலம். ஐயா, நான் மேற்படி முகவரியில் எனது மனைவியுடன் குடியிருந்து வருகிறேன். எங்களுக்கு ஒரு மகன், அவர் திருமணமாகி சென்னையில் குடியிருந்து வருகிறார். எனது அப்பா திரு.கோபிநாத் மற்றும் எனது அம்மா ஜி.சரோஜாலெட்சுமி ஆகியோர் No.70, முனியப்பன் கோயில் தெரு No 1 குகை, சேலம்-6 என்ற முகவரியில் குடியிருந்து வந்தார்கள். எனது அம்மா சரோஜாலெட்சுமி எனது அப்பாவிற்கு இரண்டாவது மனைவி ஆவார். எனது அப்பாவின் முதல் மனைவியின் பெயர் ஜி.லலிதா அவர்களுக்கு ஒரு மகள் இருந்தார். அவர் பெயர் ஜி.வசந்தி. குடும்ப பிரச்சனை காரணமாக கடந்த 16.10.1978-ம் தேதி எனது அப்பாவின் முதல் மனைவி லலிதாவும் அவரது மகள் வசந்தியும் ஒன்றாக கிணற்றில் குதித்து தற்கொலை செய்துகொண்டார்கள். அந்த சமயத்தில் போலிஸ் வழக்கு எதுவும் பதிவு செய்யவில்லை. அதேபோல இறப்பு சான்றிதழும் பெறவில்லை. பின்னர் எனது அப்பா கடந்த 17.08.1980-ம் தேதி எனது அம்மா சரோஜாலெட்சுமியை இரண்டாவதாக திருமணம் செய்து கொண்டார். அவர்களுக்கு நானும் எனது தம்பி கே.ஜி. ரவிசந்திரன் மகன்களாவோம். எனது அப்பா கடந்த 12.02.2024 தேதி வயது மூப்பின் காரணமாக இறந்துவிட்டார். எனது அம்மா மட்டும் உயிருடன் இருக்கிறார். எனது அப்பாவிற்கு நான் இறப்புசான்றிதழ் பெற்று விட்டேன். பின்னர் இறந்துபோன எனது அப்பாவிற்கு வாரிசு சான்றிதழ் வாங்குவதற்காக online -ல் விண்ணப்பத்திருந்தேன். ஆனால் அந்த விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது. அதற்கு நான் விபரம் கேட்ட போது முதலில் எனது அப்பாவின் முதல் மனைவி மற்றும் அவரது மகளுக்கு இறப்பு சான்றிதழ் வேண்டும், என்றும் பின்னர் தான் வாரிசு சான்றிதழ் பெற முடியும் என்றும் நான் தெரிந்து கொண்டேன். பின்னர் 15.10.2025-ம் தேதி மற்றும் 04.11.2025 ஆகிய தேதிகளில் சூரமங்கலம் R.D.O அவர்களிடம் இறந்தவர்களின் இறப்பு சான்றிதழ் பதிவு செய்ய கேட்டு விண்ணப்பித்திருந்தேன். மேலும் இது சம்பந்தமாக நான் மாநகராட்சியிலிருந்து எனது அப்பாவிற்கு முதல் மனைவியாகிய லலிதா மற்றும் அவர்களது மகள் வசந்தி ஆகியோர்களுக்கு இறப்பு பதிவு செய்யப்படவில்லை என்ற சான்றிதழையும் பெற்று V.A.O. ராஜசேகர் அவர்களை அவரது அலுவலகத்தில் கடந்த 12.12.2025-ம் தேதி மதியம் சுமார் 12.00 மணிக்கு சந்தித்து கொடுத்தேன். அப்போது அவர் இது மட்டும் போதாது என்றும், எனது அப்பாவும் முதல் மனைவியும் குடியிருந்த வீட்டிற்கு அக்கம் பக்கம்

உள்ளவர்களை விசாரித்து இரண்டு அறிக்கைகளை R.I -க்கு அனுப்ப வேண்டும் என்றும், அதற்கு ரூ.2,000/- தனக்கு தனியாக தரவேண்டும் என்றும் கேட்டார். அதற்கு நான் தற்போது பணம் ஏதும் கொண்டுவரவில்லை என்று கூறிவிட்டு வந்துவிட்டேன். பின்னர் 22.12.2025-ம் தேதி மதியம் சுமார் 12.30 மணிக்கு, மீண்டும் V.A.O. ராஜசேகர் அவர்களை அவரது அலுவலகத்தில் சந்தித்து அறிக்கைகள் பற்றிகேட்டேன், அதற்கு அவர் அறிக்கைகள் தயார் செய்துவிட்டேன் என்று கூறி அறிக்கைகளை எடுத்து அதில் அவர் கையொப்பம் செய்தார். பின்னர் என்னிடம் பணம் கொண்டுவந்தீங்களா என்று கேட்டார். நான் இல்லை என்று சொன்னேன். அதற்கு அவர், நான் கேட்ட ரூ.2,000/-ஐ கொடுத்தால்தான் RI-க்கு அறிக்கை அனுப்பிவைப்பேன், முதலில் பணத்தை ஏற்பாடு செய்துவிட்டு என்னை வந்துபார், இல்லையென்றால் வேலை நடக்காது என்று கூறினார். எனது அப்பாவின் இறந்துபோன முதல் மனைவி மற்றும் அவரது மகள் ஆகியோர்களின் இறப்புசான்றிதழ்களை லஞ்சம் கொடுத்து வாங்க விருப்பமில்லை. செவ்வாய்பேட்டை V.A.O. ராஜசேகர் என்னிடம் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.2,000/-ஐ ஏற்பாடு செய்து வைத்துள்ளேன். ஆகவே என்னிடம் ரூ.2,000/- லஞ்சமாக கேட்ட செவ்வாய்பேட்டை V.A.O ராஜசேகர் மீது நடவடிக்கை எடுக்க கேட்டுகொள்கிறேன்.இப்படிக்கு (ஒப்பம்/- xxxxxx (K.G. பாலாஜி 24.12.25)

Sir, Received the computer typed complaint today on 24.12.2025 at 07.00 hrs and registered a case in Salem V&AC Cr.No.22/AC/2025 u/s 7 (a) of the Prevention of Corruption Act 1988 as amended in 2018 today 24.12.2025 at 08.30 hrs after making a confidential verification on the general reputation of the accused person which is learnt to be not good. Similarly, the antecedents of the informant was also verified and nothing came to adverse. Oral concurrence of the Superintendent of Police, West Range was also obtained. Sd XXXX (R.D.RAVIKUMAR) 24.12.2025, Inspector of Police, V&AC, Salem.

The original complaint and original FIR was sent to the Hon'ble court of the Principal District and Sessions Judge, Salem and the remaining copies were sent to the officers concerned.

24.12.25.

(R.D.RAVIKUMAR)
Inspector of Police,
Vigilance and Anti – Corruption,
Salem.